**<u>DEPOSITION OF WITNESS</u>**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | Case No. | CC 416/2025 |
| **Deposition of witness for** | Prosecution<br>Defence<br>Court | P W 4 |

| | | |
|---|---|---|
| Name | : | அங்கப்பன் |
| Father's Name | : | மாரிமுத்து |
| Village | : | ரங்கநாதபுரம் |
| Taluk | : | பெரம்பலூர் |
| Calling | : | விவசாயம் |
| Religion | : | இந்து |
| Age | : | 60 |
| ACCUSED | | சடையப்பன் ஆஜர். |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.10.2025.

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் தற்போது பெரம்பலூர் ரங்கநாதபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன ராஜேஷ் எனது மகன், விபத்தில் இறந்து போன சரவணனை எனக்கு தெரியும். சுமார் 8 வருடங்களுக்கு முன்பு நான் வீட்டில்இருக்கும் பொழுது சுமார் இரவு 7.30 மணியளவில் எனது ஊர்க்காரர்கள் என் மகனும் சரவணனும் பைக்கில் சென்ற பொழுது பால்வண்டி மோதி விபத்துஏற்பட்டதாக தகவல் சொன்னார்கள். தகவல் கிடைத்து நான் பெரம்பலூர்அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். நான் சென்று பார்த்த பொழுது என் மகன் ராஜேஷிற்கு தலையில் அடிப்பட்டு இருந்தது. பிறகு எனது மகனை திருச்சி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். மேற்படி மருத்துவமனையில் இரண்டு நாள்கள் கழித்து என் மகன் சிகிச்சை பலனின்றி இறந்து போனார். விபத்து சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>குறுக்கு விசாரணை:– (எதிரி  தரப்பில்)</u>**

சம்பவத்தைக் கேள்விபட்டு நானும், எனது ஊர்க்காரர்களான முருகேசன், குமார் மற்றும் செந்தில் ஆகியோர் சென்றோம். வாகனத்தை சரவணன் ஓட்டி சென்றதாக கேள்விபட்டேன். சரவணனிற்கு ஒருபக்க கண்பார்வை தெரியாது. நான் எனது மகன் இறந்தது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். அந்த  புகாரின் அடிப்படையில்தான் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

**<u>மறுவிசாரணை :– இல்லை</u>**

**ஒப்பம்/– கி. முரளிதரகண்ணன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**